## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2016 / 2017 (யூன் - 2019)

**HYS: 4113 Sources of Sri Lankan History (Chronicles & Inscriptions)**

**HYS: 4113 இலங்கை வரலாற்றின் மூலங்கள் (இலக்கியங்களும் சாசனங்களும்)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி - I

1. இலங்கை பூர்வீக வரலாறு தொடர்பான பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்துவதில் தொல்லியல் சான்றுகள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
   அ) பூர்வீக குடிகள் (10 புள்ளிகள்)
   ஆ) நாகரிக உருவாக்கம் (10 புள்ளிகள்)

2. இலங்கை வரலாறு பற்றிய ஆய்வில் பிரித்தானியர் ஆட்சிக்காலம் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
   அ) பாளி இலக்கியங்களின் பயன்பாடு (10 புள்ளிகள்)
   ஆ) வரலாற்று ஆய்வில் தொல்லியற் சான்றுகளின் பயன்பாடு (10 புள்ளிகள்)

3. ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இலங்கை பிற நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை மேல்வரும் சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
   அ) இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் (06 புள்ளிகள்)
   ஆ) வெளிநாட்டு யாத்திரிகர்களின் பயணக் குறிப்புக்கள் (06 புள்ளிகள்)
   இ) உள்நாட்டு, வெளிநாட்டு இலக்கியங்கள் (08 புள்ளிகள்)

### பகுதி - II

4. இலங்கையில் வரலாற்று இலக்கிய மரபு தோற்றம் பெற்றதை சுருக்கமாகக் குறிப்பிட்டு, அம்மரபில் மகாவம்சம் பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. கி.பி 4 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கால இலங்கை வரலாற்றை அறிவதற்கு பிராமிச் சாசனங்கள் எந்தளவுக்கு உதவுகின்றன. (20 புள்ளிகள்)

6. இலங்கையில் ஆதிகால, இடைக்கால வரலாறு பற்றிய ஆய்வில் நாணயங்கள் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

7. கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்வில் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டும் அரசியல் வடிவங்களைச் சுருக்கமாக விளக்குக. (20 புள்ளிகள்)